**தலைப்பு 126 - கல்வி அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 கணக்காய்வு அபிப்பிராயம்

கல்வி அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்வி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 11 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்வி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன எனவும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 முற்பணக் கணக்கு மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 4 கல்வியியல் கல்லூரிகளில் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்த்து வைக்கப்படாத முற்பணங்களின் பெறுமதி ரூபா 2,310,757 ஆக இருந்ததுடன் அதில் ஒரு கல்வியியல் கல்லூரியிலிருந்து மாத்திரம் ரூபா 2,006,394 தொகையான மீதி காணப்பட்டது. | நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடு பூர்த்தியடைந்த உடன் முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

### 1.6.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் III ஆவது அத்தியாயத்தில் கல்வி தொடர்பான 2 ஆவது உறுப்புரை | கல்வி அமைச்சின் பிரதான செயற்பாடாக இனங்காணப்பட்டிருந்த முன்பள்ளிகளை மேற்பார்வை செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்யும் உரிமை அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கிணங்க முன்பள்ளிகளுக்கான ஒரு தேசிய கொள்கையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்பள்ளிகளுக்கான ஒரு தேசியக் கொள்கையைத் தயாரித்து அமைச்சின் மூலம் அது மேற்பார்வை மற்றும் முகாமைத்துவம் செய்யப்படுதல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | | | |
| (i) | 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை | பிரசை / சேவை நாடுனர் சட்டமியற்றல் தத்துவங்களுக்கு இணங்க பொதுமக்களின் சேவை அத்தியாவசியம் மற்றும் நிறுவனத்தின் இயலளவினைக் கருத்தில் கொண்டு சேவை நியமங்களை நிர்ணயித்தல், பொது மக்களுக்கு சரியான விடயங்களையும் தகவல்களையும் வெளிப்படையாகவே வழங்குவதற்கு உறுதிப்படுத்துதல், மற்றும் அனைவரையும் நன்னடத்தையாக, நட்பாக மற்றும் நியாயமாகக் | பொதுமக்கள் தேவைப்பாட்டினை விரைவாகவும் நம்பகத் தன்மையாகவும் நிறைவேற்றுவதற்கான சரியான தீர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கருதுவதனைப் போல தவறுகள் இடம்பெறுகையில் சரி செய்தல் போதியளவில் இடம்பெற்றிருக்கவில்லை. | | |
| (ii) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக அமைச்சின பதவியணியினரை ஈடுபடுத்துகின்ற முறைமை தொடர்பாக மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் மற்றும ஒவ்வொரு உத்தியோகத்தர் மட்டத்திற்கு இணங்க இனங்காணப்பட்ட திறமை இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையில் பொருத்தமான இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தை ஆக்கபூர்வமாக நிறுவனத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அமுல்படுத்துவதற்குத் தேவையான மனித வளங்களை இனங்காண்பதற்கும் அவர்களின் இயலளவினை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதி | சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அமைச்சின் பல்வேறு பதவிகளில் சேவையில் ஈடுபட்டுள்ள 242 உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுக் கொள்ளப்படாது 6 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகள் வரையான சேவைக்காலம் சேவையாற்றியுள்ளமை வெளிப்படுத்தப்பட்டது. | நிர்ணயிக்கப்பட்ட சேவைக்கால எல்லைக்குள் முறையான இடமாற்ற நடைமுறையினை அமுல்படுத்துதல் வேண்டும். | முறையான இடமாற்ற நடைமுறைக்கு இணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை ----------------------------------------- | | | |
| (i) | 1964 நவம்பர் 20 ஆந் திகதிய 1964/27 ஆம் இலக்க கல்வி அமைச்சு | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக அதிபர் நியமிக்கப்படாத 10 தேசிய | தேசிய பாடசாலைகளின் உயர்விற்காக உருவாக்கப்பட்ட பழைய மாணவர் சங்கங்களின் | அதற்கிணங்க நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயலாளரின் சுற்றறிக்கை மற்றும் 1996 யூன் 21 ஆந் திகதிய பழைய மாணவர்கள் சங்க கடிதம் | பாடசாலைகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கையை செயற்படுத்துவதற்காக அச்சங்கங்களின் தலைவராக சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் அதிபர் நியமிக்கப்படுதல் வேண்டும். | . |
| (ii) | 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்க சுற்றிக்கை மற்றும் 2008 ஒக்தோபர் 28 ஆந் திகதிய 10/2377/436/052 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் | ஒரு அரசாங்க பாடசாலையில் 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும், நுகேகொட அனுலா வித்தியாலயத்தில் 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக்காலத்துடன் 33 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | முறையான இடமாற்ற முறைமை அமுல்படுத்தப்படுதல் வேண்டும். | உத்தியோகத்தர் களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது . |
| (iii) | 2008 செம்தெம்பர் 19 ஆந் திகதிய 2008/37 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.2(இ) பந்தி | 6 ஆந் தரத்திலிருந்து 11 ஆந் தரம் வரை ஒரே சமமான சமாந்தர வகுப்புக்கள் பேணப்பட வேண்டிய போதிலும், முறையான அங்கீகாரமின்றி கண்டி மஹாமயா மகளிர் கல்லூரியில் 7 ஆம் தரத்திலிருந்தும் மற்றும் ஹொரன தக்சிலா வித்தியாலயத்தில் 9 ஆந் தரத்திலிருந்தும் ஒரு சமாந்தர வகுப்பு மேலதிகமாக பேணப்பட்டு வந்திருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் சமாந்தர வகுப்புக்களின் எண்ணிக்கைகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தியோகத்தர் களுக்கு தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. |
| (iv) | 2008 ஏப்ரல் 30 ஆந் திகதிய 2008/17 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.1 மற்றும் 4.6 ஆம் பிரிவுகள் மற்றும் 2013/4 ஆம் இலக்க | 2019 ஆம் ஆண்டின் போது நுகேகொடை அனுலா வித்தியாலயத்தில் க.பொ.த (உயர் தரத்திற்காக) மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு தெளிவுபடுத்தல் செய்யப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 03(உ) பிரிவு | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை மீறி விண்ணப்ப பத்திரங்களை கோருதல், நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல், மாணவர்களைத் தெரிவு செய்தல் மற்றும் விண்ணப்பங்களை நிராகரிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தது. | | |
| (v) | 2010 மே 31 ஆந் திகதிய 235/2011 ஆம் இலக்க மற்றும் 232/2011 ஆம் இலக்க உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கள் 2015 ஒக்தோபர் 14 ஆந் திகதிய 15/1490/742/003 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரம் மற்றும் 2015 திசெம்பர் 29 ஆந் திகதிய 34/2015 ஆம் இலக்க கல்வி அமைச்சு சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது முதலாந் தரத்தில் ஒரு வகுப்பிற்கு சேர்த்துக் கொள்ளக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 37 ஆக இருந்தும் கண்டி மஹாமாயா மகளிர் வித்தியாலத்தில் சமாந்தர வகுப்புக்கள் ஐந்தில் மூன்று வகுப்புக்களுக்கு 38 மாணவர்கள் வீதம் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது. | உரிய வழக்குத் தீர்ப்பு, அமைச்சரவை தீர்மானம், சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் முதலாம் தரத்தில் ஒரு வகுப்பில் இருக்கக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அது தொடர்பாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது . |
| (vi) | 2016 சனவரி 07 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் 71 தேசிய பாடசாலைகளின் 148 பிரதி அதிபர்கள், 26 தேசிய பாடசாலைகளின் 52 உதவி அதிபர்கள் மற்றும் 125 தேசிய பாடசாலைகளின் 389 ஆசிரியர்களுக்கு மீளாய்வாண்டின் போது எதுவித கற்பித்தல் செயற்பாடும் ஒப்படைக்கப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கற்பித்தல் நேரசூசிகள் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். | பிரதி மற்றும் உதவி அதிபர்களுக்கான கற்பித்தல் நேரசூசிகள் சம்பந்தமாக தேசிய பாடசாலை அதிபர்களுக்கு தெரியப்படுத்தப் பட்டுள்ளது. |
| (உ) | 2015 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய 1928/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | இலங்கை கல்வி நிருவாக சேவை பிரமாணக் குறிப்பின்பிரகாரம் பட்டியலப்படுத்தப்பட்ட 64 தேசிய பாடசாலைகளுக்காக இலங்கை கல்வி நிருவாக சேவையின் I ஆம் | உரிய உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய நியமனங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| | தரத்திலிலுள்ள உத்தியோகத்தர்கள் அதிபர்களாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாத கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 7,181,553 ஆகும். | ஆண்டின் இறுதியில் கட்டுநிதிக் கணக்கின் மீதியைத் தீர்த்து வைத்தல் வேண்டும். | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேர்தல் செலவுகள் அனைத்தும் தீர்த்து வைக்கப்படாதிருந்ததனால் மிகுதியாக உள்ளது. |

### 2.2 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டிற்கான 04 மீண்டும் வரும் செலவு விடயங்களின் தேறிய நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 638,466,966 கூட்டு மொத்த தொகை சேமிக்கப் பட்டிருந்ததுடன் அது 51 சதவீதத்திலிருந்து 80 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. ஒரு மீண்டுவரும் செலவு விடயத்தின் ரூபா 243,500,000 கூட்டு மொத்த நிதி ஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஆண்டிற்காக திட்டமிட்டவாறு குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டினை சிக்கனமாகப் பயன்படுத்துதல் வேண்டும். | இந்த விடயம் தொடர்பாக விசேட கவனம் செலுத்துவதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் 27 மூலதன செலவு விடயங்களின் மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 11,495,177,410 தொகை முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 45 செலவு விடயங்களின் நிதி ஏற்பாட்டில் ரூபா 10,630,937,570 தொகை அல்லது 50 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சுடைய சேமிப்புக்கள் காணப்பட்டன. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 3 செலவு விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 104,863,653 தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | தேவைப் பாட்டிற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள குறைநிரப்பு நிதி ஏற்பாட்டினை உரிய முறைப்படி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | - மேற்படி - |
| (ஈ) | சாதாரண கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்குரிய ரூபா 755,000,000 தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 601,200,002 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 79.6 சதவீதமாகும். | வெளிநாட்டு முதலீட்டிலிருந்து உச்ச அளவு விளைதிறனைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தினை ஒழுங்குபடுத்துவதற்காக இணையத்தளத்தினூடாக செயல் முன்னேற்றத்தினை குறிப்பிடக்கூடிய ஒரு படிவத்தினை அறிமுகப்படுத்தி செயல்முன்னேற்ற மீளாய்வினைக் கோருவதன் மூலம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் |

**2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இணக்க கூற்றுக்களின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச் சென்ற, மரணமடைந்த, வேலையிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்ட, சேவையை விட்டுச் சென்ற மற்றும் ஏனைய உத்தியோகத்தர் களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய மீதி ரூபா 159,311,292 ஆகும். இதில் 5 ஆண்டுகளை மிகைத்த மீதி ரூபா 68,529,282 ஆக இருந்ததுடன் அந்த அறவிட வேண்டிய மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாக உள்ள மீதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்கும் இணக்க மின்மைகளை இனங்கண்டு சரி செய்வதற்கும் முயற்சிகள் எடுத்தல் வேண்டும். | 05/2019 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தனித்தனி மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டு மொத்தமும் கட்டுப்பாட்டுக் கணக்கின் இறுதி மீதியும் பல ஆண்டுகளாக இணக்கம் செய்யப்படாது காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அது ரூபா 9,552,600 ஆல் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த மீதியை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | மாகாண கல்வித் திணைக்களத்தினதும் தேசிய கல்வியியல் கல்லூரியினதும் கணக்கிணங்கள் வித்தியாசத்துடன் சமர்ப்பிக்கப் பட்டிருந்ததனால் இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. |
| (இ) | 2017 திசெம்பர் 29 ஆந் திகதிய 262/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கையின் 4 ஆம் | - மேற்படி - | கோவைகளில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக அக்கடன் மீதிகளை ஆண்டின் போது தீர்ப்பனவு செய்வதற்கு முடியாதிருந்தது. |

| | | |
|---|---|---|
| பந்திக்கு இணக்கமற்ற வகையில் மீளாய்வாண்டின் இறுதியில் அமைச்சு முற்பணங்கள் பீ கணக்கில் மரணமடைந்த மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதியாக ரூபா 18,899,815 காட்டப்பட்டிருந்தது. | | |

**2.4 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் 2 ஆண்டுகளை மிகைத்த எனினும் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படாத பிணை வைப்புக்கள் கேள்வி வைப்புக்கள், நிதியங்கள் (சபைகள்), மூன்றாந் தரப்பினர்களுக்கு மீளச் செலுத்துதல்கள் மற்றும் ஒப்பந்த நிறுத்தி வைத்தல்கள் என்பவற்றின் பெறுமதி ரூபா 216,504,056 ஆகும். அந்த மீதியில் 5 ஆண்டுகளை மிகைத்த ரூபா 1,387,539 மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் இரண்டு ஆண்டுகளை மிகைத்த வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வைப்புக் கணக்குகளில் காணப்படுகின்ற 02 ஆண்டுகளை மிகைத்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்காக தேவையான ஆலோசனைகளை வழங்கி மாகாண கல்வித் திணைக்களத்திற்கும் கல்வியியல் கல்லூரிகளுக்கு கடிதங்கள் வழங்கப்படும். |

**2.5 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 2(அ) மற்றும் (ஈ) பிரிவுகளிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக அமைச்சின்2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,787,728,771 தொகையான | நிதிஏற்பாடு மற்றும் சேமிப்புக்களை மிகைத்து பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளாமலிருப் பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சுட்டிக் காட்டப்பட்டுள்ள சிபார்சு செய்யப்பட்ட விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துவதற்கு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| பொறுப்புக்களும் ரூபா 5,350,556,597 தொகையான கடப்பாடுகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறே, 14 செலவு விடயங்களின் சேமிப்புக்களை மிகைத்து ரூபா 765,255,768 தொகையான பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | | |
| (ஆ) முன்னைய ஆண்டிற்கான ரூபா 464,879,038 தொகையான பொறுப்புக்களை மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**2.6 வங்கிக் கணக்குகள் செயற்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| கல்வி அமைச்சு, மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் தேசிய கல்வியியல் கல்லூரிகள் தொடர்பாக வழங்கப்பட்ட 06 மாத காலத்தை மிகைத்த ரூபா 3,250,821 பெறுமதியான 25 காசோலைகள் 2019 திசெம்பர் 31 வரை வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காலங்கடந்த காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் கல்வி அமைச்சினால் 2019 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தை அமுல்படுத்துதல் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் | | |

அவதானிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டில் முடிவுறுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட ரூபா 12,251,865,000 பெறுமதியான 55 செயற்பாடுகளில் எதுவித செயலாற்றலும் மீளாய்வாண்டின் போது அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திட்டங்களை நடைமுறையில் அமுல்படுத்துவது தொடர்பாக மேற்பார்வை செய்தல் மற்றும் அவற்றின் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தினை ஒழுங்குபடுத்துவதற்காக இணையத்தளத்தினூடாக செயல்முன்னேற்றத்தை பதிவு செய்யக்கூடிய ஒரு படிவத்தை அறிமுகப்படுத்தி செயல்முன்னேற்றத்தை கோருவதன் மூலம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) அமைச்சின் கிளைகளுக்கு மத்தியில் 12 கிளைகளின் செயலாற்றல் 0.97 சதவீதத்திலிருந்து 45 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கிளையின் திட்டமிட்ட 19 செயற்பாடுகளில் ரூபா 5,881,000,000 பெறுமதியான 5 செயற்பாடுகளிலிருந்து எதுவித செயற்பாடும் இடம்பெற்றிருக்கவில்லை. | திட்டங்களில் குறிப்பிட்ட செயற்பாடுகளை உறுதியாக நிறைவேற்றுவது தொடர்பாக ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை செய்தல், பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் என்பன மேற்கொள்ளப் படுதல் வேண்டும். | - மேற்படி - |

**3.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) அமைச்சின் செயற்பாடுகளுக்கு இணங்க உலக போட்டிக்கு ஆத்ம விசுவாசத்துடனும் வெற்றித்தன்மை தொடர்பான நம்பகத்தன்மையுடனும் நுழைவதற்கான இயலுமையினை ஏற்படுத்தும் வகையில் தேசிய கல்வி முறைமையை உருவாக்குதல் வேண்டும். எவ்வாறாயினும், இச் செயற்பாட்டிற்காக 1991 ஏப்ரல் 19 ஆந் திகதிய 1991 | இலங்கையர்களின் கல்விக்காக மாற்றமற்ற ஒரு தேசிய கல்விக் கொள்கையை நிகழ்காலத்திற்குப் பொருத்தமான வகையில் தயாரித்தல் வேண்டும். | தேசிய கல்விக் கொள்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது எனவும் அது சம்பந்தமாக கல்வியியலாளர் குழு செயற்பட்டு வருகின்றது எனவும் |

| | | | |
|---|---|---|---|
| | இன் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தினால் ஆரம்பிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவினால் 2003 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டின் இறுதிவரையும் நிர்ணயிக்கப்பட்ட மற்றும் நிரந்தரமான தேசிய கல்விக் கொள்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 1961 இன் 8 ஆம் இலக்க இரண்டாந்தர பாடசாலை பயிற்சி கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் 5 வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப்பட்ட வயது எல்லையுடைய பிள்ளைகளுக்கு கல்வியினை வழங்குவதற்கு தனியார் பாடசாலைகளை ஆரம்பிக்காதிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், அதிகாரச்சட்டத்திற்கு முரணாக ஆரம்பிக்கப் பட்டிருந்த சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளை மேற்பார்வை செய்தலானது கல்வி அமைச்சின் பிரதான குறிக்கோள்களுக்கு மத்தியில் ஒன்றாக இருந்த போதிலும், அது சம்பந்தமான மேற்பார்வையானது அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தற்பொழுது தீவிரமாக விரிவடைந்துள்ள தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகள் தொடர்பாக முறையான மேற்பார்வையும் ஒழுங்குபடுத்தலும் இடம்பெறுதல் வேண்டும். | உரிய சட்ட ரீதியான ஏற்பாடுகளை திருத்தம் செய்து முறையான பிரமாணங்களை உருவாக்கியதன் பின்னர் சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளை முறைமைப்படுத்துதல் மேற்கொள்ளப்படும். |
| (இ) | க.பொ.த உயர்தர 13 ஆம் ஆண்டிலுள்ள மாணவர்களை தொடர்ச்சியாக பாடசாலைக் கல்வியினுள் வைத்திருப்பதற்கான பரிகாரத்தை ஈடுபடுத்துவதற்குரிய | க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவடையும் வரை மாணவர்களின் வருகையை கட்டாயப்படுத்தி | மாணவர்களை பாடசாலைக்கு அழைத்து வருவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | திட்டங்கள் எதுவும் அமைச்சின் வருடாந்த திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | பாடசாலைக் காலத்திற்குள் மாணவர்களை பாடசாலையில் நிறுத்தி வைப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். | |
| (ஈ) | 2016 ஆம் ஆண்டிலிருந்து அடுத்துவரும் 5 ஆண்டுகளுக்குள் அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட பாடசாலை மாணவர்களின் உடல்ரீதியான பொருத்தத்தன்மையை மேம்படுத்துவதற்கான ஒரு செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 700 மில்லியன் கூட்டு மொத்தமான நிதிஏற்பாடு கிடைத்திருந்தது. நிகழ்ச்சித்திட்டத்திற்கான திட்டமிடப்பட்ட காலமான 05 ஆண்டுகளில் 4 ஆண்டுகள் கடந்து அதற்காக ரூபா 237.74 மில்லியன் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அது நிர்ணயிக்கப்பட்டவாறு அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | உடல்ரீதியான மற்றும் உள ரீதியான சமநிலைக் கல்வி முறைமையினுள் அனைத்து மாணவர்களின் உடல்ரீதியான பொருத்தத் தன்மையை மேம்படுத்து வதனை குறிக்கோளாகக்கெ காண்டு விளையாட்டு நிகழ்ச்சித் திம்டங்களை ஆக்கபூர்வமாக அமுல் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019-2025 வரை விளையாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதி வரை 1,220 மாணவர்கள் கல்வி கற்கின்ற 107 தேசிய பாடசாலைகளில் காணப்படுகின்ற விசேட கல்விப் பிரிவிற்கு 305 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், 81 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்பட்டன. | விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கு விசேட பயிற்சிகள் பெற்ற ஆசிரியர்களை ஈடுபடுத்துவதற்கும் ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விசேட கல்விப் பயிற்சிகளைப் பெற்று அந்த சேவையில் ஈடுபடுத்தாத ஆசிரியர்களை உரிய துறைக்கு இடமாற்றம் செய்வதற்கு மாகாண அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக புதிய ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | விளையாட்டு திறமையுள்ள தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளை உருவாக்கும் குறிக்கோளை முன்னிலைப்படுத்தி 1989 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட 22 விளையாட்டுப் பாடசாலைகள் கடந்த 5 ஆண்டுகளின் போது செயற்படும் நிலையில் காணப்படவில்லை. அதன் காரணமாக அப்பாடசாலைகளில் காணப்பட்ட விடுதிகள், விளையாட்டு உபகரணங்கள், உடல் வலிமையை கட்டியெழுப்பும் உபகரணங்கள் குறைப்பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தன. கடந்த 05 ஆண்டுகளில் 293 விளையாட்ட புலமைப்பரிசில் தாரர்கள் முகாமைத்துவ பலவீனம், முறையான பயிற்சிகள் கிடைக்காமை, விளையாட்டுப் பாடசாலைகள் செயற்படாமை ஆகிய காரணங்களால் இப்பாடசாலைகளிலிருந்து விலகிச் சென்றிருந்தார்கள். இப்பாடசாலைகளில் இடைத்தரங்களுக்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது விளையாட்டுத் திறமையுள்ள மாணவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இட வசதிகளும் பயன்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாக விளையாட்டு புலமைப்பரிசில் தாரர்களை சேர்த்துக் கொள்வதற்கு இடவசதிகள் இருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் 22 விளையாட்டு பாடசாலைகளில் விளையாடுவதற்குப் பொருத்தமான இடம் இல்லாத 10 பாடசாலைகள், மின்சார குறைபாடு உள்ள 08 | விளையாட்டுப் பாடசாலைகளை செயற்திறனாக அமுல்படுத்தும் நிலையில் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விளையாட்டு மாணவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட வெற்றிடங்களை வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | பாடசாலைகள் ஆபத்துடனான விடுதிகள் காணப்படுகின்ற 04 பாடசாலைகள் மற்றும் சுகாதார வசதிகள் குறைந்த 12 பாடசாலைகள் காணப்பட்டன. | | |
| (எ) | பாடசாலைகள் மட்டத்தில் விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்தல் ஒழுங்குபடுத்துதல், பாடசாலை விளையாட்டு சங்கங்களைப் பதிவு செய்தல் என்பவற்றை குறிக்கோளாகக் கொண்டு அமைக்கப்பட்டள்ள விளையாட்டு சபைகளின் செயற்பாடுகள் தற்பொழுது வரை செயலிழந்து இருந்தது. அதன் காரணமாக விளையாட்டுச் சங்கங்களின் நிதி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், விளையாட்டு வீரர்களை வெளிநாட்டு போட்டிகளுக்கு பங்குபற்றச் செய்வதற்கு போதியளவு ஈடுபாடு, அனைத்து விளையாட்டுச் சங்கங்களின் போட்டிகள் விளையாட்டுச் சங்கங்களின் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான மேற்பார்வை ஒழுங்குபடுத்துதல், பாடசாலை விளையாட்டுச் சங்கங்களின் மூலம் பேணப்பட்டு வருகின்ற அங்கீகரித்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு போட்டிகளுக்கு அனுசரணைகளை வழங்குவதற்கான நியாயமான ஈடுபாடு முதலிய விடயங்கள் இடம்பெற்றிருக்கவில்லை. | பாடசாலை விளையாட்டுக் களை அபவிருத்தி செய்வதற்காக வலுவுடைய ஒத்துழைப்புக் களை வழங்குவதற்கு முடியுமான வகையில் விளையாட்டு சபைகளையும் விளையாட்டு சங்கங்களையும் அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும். | தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதனால் எதிர்காலத்தில் விடயங்கள் விபரிக்கப்படும். |
| (ஏ) | கல்வி நியமங்களுக்கு இணங்க கற்பித்தல் பொருட்களை வழங்குவதனூடாக கல்விக்கு சமமான நுழைவினை உறுதிப்படுத்துவதற்காக தொடக்க செயற்பாடுகளை மேற்கொள்ளும் கல்வி | மேலதிக கல்வி வெளியீடுகள் அனைத்தையும் பாடசாலை மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் ஒரு முறைமை ஸ்தாபிக்கப்படுதல் | திணைக்களத்தின் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிலையத்திற்கு மேலதிகமாக பதிவு செய்யப்பட்ட புத்தக விற்பனை நிலையங்களில் இப்புத்தகங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| வெளியீட்டுத் திணைக்களத்தினால் உயர்தர சாதாரண ஆங்கிலத்திற்கானதைத் தவிர்த்து க.பொ.த உயர்தர பாடங்களை கற்பவர்களின் பிரதான பாடங்களுக்காக புத்தகங்கள் அச்சிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை (உயர்தரம்) பாடங்களுடன் தொடர்புபட்ட 393,500 மேலதிக புத்தகங்கள் அச்சிடப்பட்டதுடன் அப்புத்தகங்கள் நேரடியாக பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாது கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிலையத்தினூடாக மாத்திரம் சந்தைப்படுத்தப்பட்டிருந்தது. | வேண்டும். | |

## 3.3 ஏனைய அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | குருணாகல் மலியதேவ ஆண்கள் கல்லூரியின் மாணவர் தலைவர்கள் சபையின் பெயரில் 2016 இலிருந்து 2018 வரை வைப்புச் செய்யப்பட்ட ரூபா 3,166,067 கூட்டு மொத்தமான பணம் 2019 செப்தெம்பர் மாதமளவில் நீக்கிக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், பாடசாலை அபிவிருத்தி நிதியத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | பாடசாலைகளுக்கு இணைத்துக் கொள்ளப்படுகின்ற சங்கங்களினால் பேணப்படுகின்ற சட்டரீதியான நிலைமைக்கு உட்பட்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு மேலதிக நடவடிக்கைகள் எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பாடசாலை முறைமையின் கற்பித்தல் செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகின்ற 4 வகையான சொத்துக்களின் 206 விடயங்கள் குறைப் | குறைப் பயன்பாட்டிற்கு உட்பட்ட பொருட்களை இனங்கண்டு | மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | பயன்பாட்டிற்கு உட்பட்டும் 07 வகையான சொத்துக்களின் 141 விடயங்கள் பயன்படுத்தப்படாததும் காணப்பட்டன. | தேவைப்பாடுகள் உள்ள ஏனைய பாடசாலைகளுக்கு வழங்குவதற்கு அல்லது குறைப் பயன்பாட்டிற்கு உட்படுத்துவதற்கு காரணமாக விடயங்களை இனங்கண்டு அதற்கான பரிகாரங்களை ஈடுபடுத்துவதற்கும் புதிய தொழில்நுட்ப அறிவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக கணனிகளை நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்காக கால தாமதமின்றி நடவடிக்கை எடுப்பதற்கும் முயற்சிகள் எடுக்கப்படுதல் வேண்டும். | |
| (இ) | 2008 செப்தெம்பர் 24 ஆந் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தின் அமப/08/1742/316/086 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு தோற்றுவிக்கப்பட்டிருந்தும் அது தொடர்பான வரைவு சட்டம் 2008 ஒக்தோபர் 29 ஆந் திகதி சட்ட வரைஞர் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை அதிகாரச்சட்டத்தின் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டிருக்க வில்லை. எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டின் போது இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுவிற்கு திரண்ட நிதியத்திலிருந்து | இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு தொடர்பாக வரைவாக்கப்பட்ட அதிகாரச்சட்டத்தின் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இச்செயற்பாட்டை விரைவுபடுத்துவதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு எழுத்து மூலமான வேண்டுதல் 2020 மார்ச் மாதம் விடுவிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்த ரூபா 42,184,462 தொகை செலவு செய்யப்பட்டிருந்தும் ஆணைக்குழுவில் செயலாற்றல் சம்பந்தமான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஈ) | இலங்கை யுனெஸ்கோ ஆணைக்குழுவின் பதவியணியினர்களை நியமித்தல் மற்றும் கொடுப்பனவு செய்தல் இந்த அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதிகாரச்சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் 2008 செப்தெம்பர் மாதம் 24 ஆந் திகதிய அமப/08/1742/316/086 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆணைக்குழுவிற்கு பதவியணியினர்கள் நியமிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், பிரான்சின் பரிஸ் நகரத்தில் அமைந்துள்ள யுனெஸ்கோ நிரந்தர முகவர் அலுவலகத்திற்கு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் இணைத்துக் கொள்ளப்பட்டு அவரின் ஊதியமாக மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 45.85 மில்லியன் கூட்டு மொத்தமான நிதிஏற்பாடு கல்வி அமைச்சினால் வெளிவிவகார அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | அதிகாரச்சட்டத்திற்கு அங்கீகாரம் பெறப்பட்டு அதில் உள்ளடக்கப்பட்ட வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு விபரண குறிப்பின் அதிகாரம் மற்றும் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. |
| (உ) | 2019 மே மாதத்தில் நடாத்தப்பட்ட கருத்தரங்கிற்காக அமைச்சில் ஒப்பந்த அடிப்படையில் | வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது கருத்தரங்குகளின் | இவ்விடயம் தொடர்பாக உள்நாட்டின் கல்வித் துறையினுள் செயற்திட்டங்களை மேற்கொள்ளும் |

| | | |
|---|---|---|
| சேவையாற்றிய ஒரு உத்தியோகத்தர் பங்குபற்றச் செய்து அதற்காக ரூபா 563,443 செலவு செய்யப்பட்டிருந்தும் 2019 திசெம்பர் மாதத்திலிருந்து அந்த உத்தியோகத்தர் பதவியை கைவிட்டுச் சென்றிருந்தார். | மூலம் பெற்றுக் கொள்கின்ற அறிவை ஆக்கபூர்வமாக நிறுவனத்தின் செயலாற்றலை அதிகரிப்பதற்கு ஈடுபடுத்துதுல் வேண்டும். | குறிக்கோளினை முன்னிலைப்படுத்தி அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. |

**4. பெறுகைகள்**

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 10,031 மில்லியன் தொகையான பெறுகைகளை மேற்கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 25.5 மில்லியன் பெறுமதியான பெறுகைகள் மாத்திரம் முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 272.82 மில்லியன் பெறுகை செயற்பாடுகளுக்குரிய கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் கேள்விகளைக் கோருதல் நடைமுறையின் ஆரம்பக் கட்டத்தில் காணப்பட்டது. அவ்வாறே 2019 பெப்ரவரி அளவில் முடிவுறுத்த வேண்டிய ரூபா 15 மில்லியன் தொகையான கா.பொ.த உயர்தர உயிரியல் முறைமை தொழில்நுட்ப பாடத்திற்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் செயற்பாடு மீளாய்வாண்டின் இறுதி வரையும் கேள்விகளை மதிப்பீடு செய்யும் கட்டத்தில் | ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை திட்டமிடப்பட்டவாறு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்து எதிர்பார்த்த பௌதீக செயல் முன்னேற்றத்தை ஆக்கபூர்வமாக அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அவ்வாறு செய்யப்பட்டுள்ளது எனவும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன் ரூபா 173.74 மில்லியன் பெறுமதியான 12 பெறுகைச் செயற்பாடுகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | சாதாரண கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம் (GEM செயற்திட்டம்) தொடர்பாக ரூபா 144.12 மில்லியன் பெறுமதியான 19 பெறுகை செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டிருந்தும் ஆண்டின் இறுதியளவில் அதில் ரூபா 0.71 மில்லியன் பெறுமதியான 2 பெறுகைச் செயற்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | - மேற்படி - | உரிய உத்தியோகத்தர் களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |
| (இ) | உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் காரணமாக அத்தியாவசிய செயற்பாடாகக் கருதி மேற்கொள்ளப்பட்ட நுகேகொடை அனுலா வித்தியாலயத்தில் ரூபா 1,016,000 பெறுமதியான பாதுகாப்பு வேலியை நிர்மாணிக்கும் போது கல்வி அமைச்சு செயலாளரின் 2013 ஏப்ரல் 19 ஆந் திகதிய 01/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மற்றும் 2015 சனவரி 29 ஆந் திகதிய 05/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பாக பெறுகை நடைமுறை வெளிப்படைத் தன்மையாக மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பெறுகை நடைமுறையினை வெளிப்படைத் தன்மையாக மேற்கொள்ள வேண்டியதுடன் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உருவாகியிருந்த ஆபத்தான நிலைமையின் அடிப்படையில் விரைவாக நிறைவேற்ற வேண்டியிருந்ததனால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | ரூபா 4,479,000 பெறுமதி செலவு செய்து ஒரு ஆண்டு உத்தரவாத காலத்துடன் | இந்த மின்சார பாரந்தூக்கி உத்தியோகத்தர் | உத்தரவாத காலம் ஒரு ஆண்டு மாத்திரம் என்பதனால் உரிய |

| | | | |
|---|---|---|---|
| | 2017 ஒக்தோபர் மாதத்தின் போது பொருத்தப்பட்ட அமைச்சின் நான்காவது மாடி வரை செயற்பட்டு வந்த மின்சார பாரந்தூக்கியின் உத்தரவாத காலத்தின் பின்னர் நிரந்தரமாக செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக 40 நாட்கள் செயற்பாடற்று இருந்ததுடன் திருத்தம் செய்வதற்காக ரூபா 292,602 செலவு செய்யப்பட்டிருந்தது. | களின் பாவனைக்காக இடையூறுகள் இன்றி செயற்படச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | பணத்தை செலுத்தி பாரந்தூக்கியை நல்ல நிலைக்கு கொண்டு வர வேண்டியிருந்தது எனவும் உத்தரவாத காலத்தின் பின்னர் கதவுக்கு அருகாமையில் 08 வெடிப்புக்கள் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலம் முடிவடைந்திருந்த 25 தேசிய பாடசாலைகளின் 45 கட்டிடங்களை நிர்மாணித்தல் மீளாய்வாண்டின் இறுதியளவில் முடிவடைந்துள்ளதுடன் 2013 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் இந்த தாமதமடைந்த நிர்மாணங்களில் எதுவித செயல்முன்னேற்றமும் காட்டியிருக்காத 27 கட்டிடங்கள் 17 தேசிய பாடசாலைகளில் காணப்பட்டன. | கட்டிட நிர்மாணங்களின் தாமதத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அந்த வசதிகளை ஏனைய பயன்பாட்டிற்காக விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்கு தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. |

## 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 373 தேசிய பாடசாலைகளில் 278 பாடசாலைகளில் காணப்படுகின்ற நிரந்தர அதிபர் பதவி வெற்றிடங்களுக்காக 2020 பெப்ரவரி மாதத்தின் போது 153 அதிபர்கள் மாத்திரம் | பல ஆண்டுகளாகக் காணப்படுகின்ற அதிபர் வெற்றிடங்களுக்கு உறுதியான மற்றும் நியாயமான ஒரு வேலைத்திட்டம் | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | நியமிக்கப்பட்டிருந்தனர். | அமுல்படுத்துப் படுதல் வேண்டும். | |
| (ஆ) | 2016 மே 16 ஆந் திகதிய 17/2016 ஆம் இலக்க அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்திக்கு முரணாக 2017 ஆம் ஆண்டின் போது 109 தேசிய பாடசாலைகளுக்கு 6,337 மாணவர்கள், 2018 ஆம் ஆண்டின் போது 73 பாடசாலைகளுக்கு 3,339 மாணவர்கள் 2019 ஆம் ஆண்டின் போது 81 பாடசாலைகளுக்கு 6,366 மாணவர்களாக மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | காணப்படுகின்ற வசதிகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படாது சுற்றறிக்கை எல்லைகளை மிகைத்து இடைத்தரங்களுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளப் படுவதனைக் குறைப்பதற்காக நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | கல்வி அமைச்சரின் விசேட அங்கீகாரத்தின் அடிப்படையில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல் இடம்பெறுகின்றது. |
| (இ) | பரீட்சைகள் திணைக்களத்தின் புள்ளி விபரங்களின் பிரகாரம் 2019 ஆண்டில் உயர்தரப் பரீட்சையில் பௌதீக விஞ்ஞானம், இரசாயனவியல், உயிரியல் இணைந்த கணிதம், அளையியலும் விஞ்ஞான முறைமையும், தொழில்நுட்ப விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம், பொருளியல், புவியியல், அரசியல் விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், ஆங்கிலம், சாதாரண ஆங்கிலம் முதலிய பாடங்களை கற்கின்ற மாணவர்களில் 30 சதவீதத்திற்கு அண்மித்த அளவானவர்கள் சித்தியடைந்திருக்கவில்லை. அதற்கிணங்க 2019 ஆம் ஆண்டின் போது அனைத்து பாடங்களிலும் மூன்று பாடங்களில் சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை 23,404 ஆக உள்ளதுடன் முன்னைய ஆண்டு களிலிருந்து காணப்பட்டு வரும் இப்பெறுபேறுகள் | அனைத்து பெறுபேறுகளையும் மதிப்பீடு செய்வதன் மூலமும் முறையான ஆய்வின் பின்னரும் கல்விக் கட்டமைப்பினுள் காணப்படுகின்ற குறைபாடுகளை இனங்கண்டு தேவையான பரிகாரங்கள் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். | உரிய விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து பரிகாரங்களை ஈடுபடுத்துவதற்கு உரிய உத்தியோகத்தர்கள் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்கள் |

| | | | |
|---|---|---|---|
| | குறைவடைவதற்கு காரணமாக விடயங்களை இனங்காண்பதற்கும் அதற்கான பரிகாரத்தை ஈடுபடுத்துவதற்கும் போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 125 தேசிய பாடசாலைகளில் அனைத்து பிரிவுகளிலும் 2019 ஆம் ஆண்டின் போது உயர் தரத்திற்காக தோற்றிய 2,519 மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் சித்தியடைந்திருக்கவில்லை. அந்த சித்தயடையாமை பாடங்களுக்கு இணங்க முறையே உயிரியல் 617 கணிதம் 848 வணிகம் 342, கலை 336, தொழில்நுட்பவியல் 376 என்பனவாக இருந்ததுடன் மாணவர்கள் சித்தியடையாமையைக் குறைப்பதற்காக பொருத்தமான வேலைத்திட்டம் தயாரிக்கப்படவில்லை. | மாணவர்கள் கற்கின்ற பாடங்கள் தொடர்பாக அவர்களுக்கு உள்ள இயலுமையும் நடைமுறையும், ஆசிரியர்கள் அப்பாடங்கள் தொடர்பாக பெற்றுக் கொள்கின்ற அறிவு, பரீட்சை வினாத்தாள் முதலிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி மாணவர்களின் சித்தியடையாமை யைக் குறைப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | துறையில் காணப்படுகின்ற பொதுவான தாக்கங்களுக்கு மேலதிகமாக ஆசிரியர் பற்றாக்குறை, ஆய்வுகூட தட்டுப்பாடு, பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் சேவையிலிருந்து விலகுதல் ஆகிய விடயங்கள் பெறுபேறுகள் குறைவடைவதற்கு தாக்கமளித்துள்ளது எனவும் அதற்கான தந்திரோபாயங்களை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (உ) | 2008 செப்தெம்பர் 19 ஆந் திகதிய 2008/37 ஆம் இலக்க அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 மே 19 ஆந் திகதியில் உள்ளவாறு தேசிய பாடசாலைகளில் இடைத்தரங்களில் காணப்பட்ட வெற்றிடங்களுக்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு 2019 ஆம் ஆண்டின் போ்து பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்பட்டிருந்தன. வெற்றிடங்கள் காணப்படாத 11 பாடசாலைகளுக்கும் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் ஹொரன தக்சிலா | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரமும் காணப்படுகின்ற சட்டரீதியான நடைமுறைக் குள்ளும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | வித்தியாலயத்தில் வெற்றிடங்கள் இல்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் உண்மையாக 124 வெற்றிடங்கள் காணப்பட்டன. | | |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியில் தீர்ப்பனவு செய்து முடிவுறுத்தப்படாத 479 ஒழுக்காற்று பிரச்சினைகள் காணப்பட்டன. | ஒழுக்காற்று பிரச்சினைகளை விரைவாகத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விரைவாகத் தீர்த்து வைப்பதற்குத் தேவையன முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் அமைச்சின் சிரேஷ்ட மட்டத்தில் இரண்டாம் மட்டத்திலுள்ள உத்தியோகத்தர் வெற்றிடங்கள் 2,276 ஆகக் காணப்பட்டதன் காரணமாக முகாமைத்துவ தீர்மானங்களை எடுக்கும் போதும் முன்றாம் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 3235 வெற்றிடங்கள் காணப்பட்டதன் காரணமாக அமைச்சு நடவடிக்கைகளிலும் இடையூறுகள் உருவாகியிருந்தது. | அத்தியாவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | 143 தேசிய பாடசாலைகளில் 1490 பாடங்களுக்காக 1859 ஆசிரியர்களும் 787 பாடங்களுக்கு 1202 ஆசிரியர்களும் மிகையாகவும் காணப்பட்டன. இரண்டாம் மொழியாக தமிழ் அல்லது சிங்களம் கற்பிப்பதற்காக 36 தேசிய பாடசாலைகளில் வெளியிலிருந்து சேர்த்துக் | தேசிய பாடசாலைகளில் காணப்பட்ட ஆசிரியர் பற்றாக்குறையையும் மிகையையும் குறைப்பதன் மூலம் பாடசாலைகளில் காணப்பட்ட ஆசிரியர் தேவைப்பாடுகளை | 2020 ஆம் ஆண்டிலிருந்து பாடங்களின் பிரகாரம் செம்மையாக்கி ஆசிரியர் பற்றாக்குறையையும் மிகையையும் சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளப்பட்ட 48 ஆசிரியர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 6,012,225 செலுத்தப்பட்டது. | பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| (இ) | 135 தேசிய பாடசாலைகளில் கல்விசாரா பதவியணியில் 1,619 வெற்றிடங்களும் 403 பதவியணியினர் மிகைகளும் காணப்பட்டதுடன் 30 தேசிய பாடசாலைகளில் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களால் சம்பளம் செலுத்தி கல்விசாரா பதவியணியில் 134 நபர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததனால் மீளாய்வாண்டின் போது மாத்திரம் அவர்களுக்கும் செலுத்தப்பட்ட மொத்த பணம் ரூபா 21,932,019 ஆகும். | போதியளவு கல்விசாரா பதவியணியினர் களைப் பேணுவதற்கு அவர்களின் கடமைகளை உச்ச அளவுக்கு பாடசாலைகளுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதவியணியினர் அளவு போதியதல்லாத சந்தர்ப்பங்களில் அவ்வாறு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. |
| (ஈ) | எதிர்கால மற்றும் நவீன கல்வி முறைமையின் பிரகாரம் சேவைக்கு முந்திய ஆசிரியர் பயிற்சியினை அமுல்படுத்துவதனை குறிக்கோளாகக் கொண்டு 19 கல்வியியல் கல்லூரிகளில் 209 கல்விசார் பதவியணியினர்களும் 167 கல்விசாரா பதவியணியினர்களும் வெற்றிடமாகக் காணப்பட்டது. மேலும், முறையான இடமாற்றல் கொள்கை இல்லாமையின் காரணமாக 14 கல்வியியல் கல்லூரிகளின் கல்விசார் பதவியணியில் 190 நபர்கள் மற்றும் 15 கல்வியியல் கல்லூரிகளில் கல்விசாரா பதவியணியில் 240 நபர்கள் இடமாற்றமின்றி 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சேவையில் ஈடுபட்டுள்ளனர். | எதிர்கால சவால்களை வெற்றிக் கொள்வதற்கு சிறந்த நிபுணத்துவம் உள்ள ஆசிரியர்களை உருவாக்கு வதற்காக தேவையான மனித வளங்களை வழங்குதல் வேண்டும். முறையான இடமாற்றல் முறையினை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அதற்காக மேலதிக முயற்சிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டது. இலங்கை ஆசிரியர் கல்விச் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு இதுவரை வருடாந்த இடமாற்றக் கொள்கை இல்லை எனவும் தற்பொழுது வருடாந்த இடமாற்ற கொள்கை தயாரிக்கப்பட்டு 2020 இலிருந்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 8 வலயங்களின் தகவல்களின் பிரகாரம் 2004 ஆம் ஆண்டிலிருந்து 2019 திசெம்பர் வரை நிகழ்கால சம்பள படி நிலையில் அமர்த்தப்படாத அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 6695 ஆகும். | நிகழ்கால சம்பள படி நிலையில் அமர்த்தப்படாதிருந்தமையின் காரணமாக இடம்பெற்றுள்ள தவறை சரி செய்தல் வேண்டும். | தகவல்கள் கோரப்பட்டுள்ளது எனவும் விரைவாக பதிலை வழங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது. |
| (ஊ) | 2019 திசெம்பர் 31 இல் உள்வாறு அமைச்சில் பேணப்பட்டு வந்த தகவல்களின் பிரகாரம் 9 மாகாணங்களிலுள்ள தேசிய பாடசாலைகள் மற்றும் பிரிவேனாக்களில் ஆசிரியர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைச் சம்பளம் ரூபா 411,382,945 ஆக இருந்ததுடன் மாகாண அலுவலகங்கள் பேணிய தகவல்களின் பிரகாரம் 9 மாகாணங்களில் ஏனைய பாடசாலைகளின் ஆசிரியர்களுக்குச் செலுத்த வேண்டியிருந்த அனைத்து ஆசிரியர் சம்பளங்களின் மொத்த தொகை ரூபா 828,704,012 ஆகும். | நிலுவையான சம்பங்களை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | - மேற்படி - |